முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது. அது, அவ்வப்போது, பல்கலைக் கழகத் துணை வேந்தரால், கவனிக்கப்படுகிறது.

திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதியார் பல்கலைக் கழகத்திற்கு நிலம் கொடுத்த விவசாயிகள் அனைவருக்கும் வேலை கொடுக்க வேண்டும் என்பது அந்தப் பல்கலைக் கழகத்திலே ஒரு எண்ணமாக இருந்தாலும் கூட, அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, அங்கே இருக்கின்ற வேலைவாய்ப்புக்களை ஒட்டி அவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படுவதால், மிகக் குறைவாகத்தான் அங்கே வேலை வாய்ப்பு கிடைக்கிறது. ஆயிரக்கணக்கானவர்கள் வேலை கிடைக்குமா என்று காத்துக்கொண்டிருக்கிறார்கள். எல்லோருக்கும் அந்தப் பல்கலைக் கழகத்திலே வேலையில்லை என்றும் தெரிய வருகிறது. எனவே, வேறு அரசாங்க நிறுவனங்களிலாவது வேலைவாய்ப்பு வருகின்றபோது, அவர்களுக்கு முன்னுரிமை தந்து, அந்தக் குடும்பங்களை கவனிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் வழங்கியவர்கள் 337 பேர். அந்த 337 பேரில், 57 பேருக்கு வேலை வழங்கப்பட்டிருக்கிறது. மற்றவர்களுக்கும் வேலை வழங்க முன்னுரிமை தருவதற்கு, பல்கலைக் கழகம் ஒப்புக்கொண்டிருக்கிறது. மற்ற அரசு நிறுவனங்களிலே வழங்க வேண்டுமானால், அதை ஒரு கொள்கை அடிப்படையிலே பரிசீலிக்க வேண்டும். பரிசீலித்து ஏற்றுக்கொண்டால் தான், அதை நடைமுறைப்படுத்த முடியும்.

முன்சீப் கோர்ட் அமைத்தல்

*6298. **திரு. பி. மாரப்பன் :**

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெருந்துறை தாலுக்கா, பெருந்துறை நகரில் முன்சீப் கோர்ட் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்பொழுது நிறைவுபெறும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : பெரியார் மாவட்டம் பெருந்துறையில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஒன்றை அமைக்க உயர்நீதி மன்றம் பரிந்துரை செய்துள்ளது. இச் செயற்குறிப்பை

1990 ஏப்ரல் 19]

1990–91ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டமாகப் பரிசீலிக்க முடிவு கொண்டுவரப்பட்டது. நிதிநிலை நெருக்கடி காரணமாக அந்தச் செயற்குறிப்பு திட்டத்தில் இடம் பெறவில்லை.

9–10 மணி

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 1990–91–வது ஆண்டு அங்கே வழக்கு மன்றம் கொண்டு வருவதற்கு அரசு முயற்சி எடுத்தாலும் நிதிநிலை நெருக்கடி இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்த ஆண்டிலே அந்த வழக்கு மன்றத்தை அங்கே கொண்டு வருவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ளும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நிதிநிலைமையை அனுசரித்து நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கிறது.

திரு. டி. சி. விஜயேந்திரையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு தாலுக்காவிலேயும் ஒரு முன்சீப் கோர்ட் இருக்கவேண்டுமென்கிற எண்ணத்தில், இப்போது தேன் கனிக்கோட்டை வட்டத்திலே ஒன்று இல்லாமல் இருப்பதால் அதை ஏற்படுத்த அரசின் கவனத்தில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நெருக்கடிநிலை காரணமாக பெருந்துறையில் நீதிமன்றம், முன்சீப் கோர்ட் ஆரம்பிக்கவில்லை என்று சொன்னார்கள். ஆனால், ஈரோட்டில் இரண்டு நீதி மன்றங்கள், டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட், அடிஷனல் டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட் ஆகிய இரண்டு இருக்கின்றன. ஆகவே, அந்த அடிஷனல் டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டை, ஈரோட்டிலிருந்து, பெருந்துறையில் நடைபெறுவதற்கு அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, ஈரோட்டில் முதன்மை சார்பு நீதிமன்றம்-ட்டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டுகள், முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஈரோடு, அடிஷனல் டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட், ஈரோடு என்று இரண்டு கோர்ட்டுகள் இருக்கின்றன. பெருந்துறையைப் பொறுத்தவரையிலும் ஈரோடு கோர்ட் ஜூரிஸ்டிக்ஷனில்தான் இருக்கிறது. எனவேதான், மாண்புமிகு உறுப்பினர் அ.லெ. சுப்பிரமணியன் சொன்ன கருத்தை உயர்நீதிமன்றத்தோடு கலந்து ஆலோசித்து நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. க. பழனிசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பல நீதிமன்றங்கள் வாடகைக் கட்டிடங்களில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. இதற்குப் புதிய கட்டிடம் கட்டிக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக் கேள்விக்குத் தொடர்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருந்தாலும் திரு. பழனிசுவாமிக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்தேன். அவ்வளவுதான். (சிரிப்பு).

தண்டனைக்குள்ளான மகளிர் சிறையில் அணிகின்ற வெள்ளை ஆடை

*9029. திருமதி எஸ். பி. சற்குணம் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தண்டனைக்குள்ளான மகளிர் சிறையில் அணிகின்ற வெள்ளை ஆடை மாற்றப்படுமா?

(ஆ) ஆம் எனில், வேறு வண்ண ஆடை எப்போது வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வெள்ளை ஆடைக்குப் பதிலாக கலரில் (மெரூன் கலரில்) வழங்குவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திருமதி எஸ். பி. சற்குணம் : பேரவைத் தலைவர் அவர்களே, தண்டனைக்குள்ளான மகளிருக்கு வெள்ளை ஆடை இதுவரை வழங்கப்பட்டு வந்தது. சென்னையில் மொழிப் போராட்டத்தில் கைதாகி, தமிழ் இனத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு தண்டனை வழங்கி, கைதி ஆடை அவருக்கு வழங்கப்பட்ட நேரத்தில் ஐம்பதுக்கு மேற்பட்ட எங்களைப் போன்ற தாய்மார்களுக்கும் கடந்த கால அரசியல் வெள்ளைச் சேலைதான் அணிந்து கொள்வதற்குத் தந்தார்கள். அதைப்போலவே, குடிதண்ணீர்ப் பிரச்சினைக்காகப் போரட்டத்தில் ஈடுபட்ட சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த கழகத் தோழர்களையும்' தோழியர்களையும் வேலூர் சிறைச்சாலையிலே கொண்டு போய் அடைத்தபோது அங்கு தண்டனைக்குள்ளான தாய்மார்கள் வெள்ளை